செய்தி வெளியீடு எண்: 541 நாள்: 21.11.2016

## செய்தி வெளியீடு

நாள்தோறும் பயன்பாட்டிற்கு வரும் புதிய பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைத் தரப்படுத்தி ஊடகங்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும் வழங்கும் நோக்கில் **தமிழ்க் கலைக்கழகம்** என்னும் அமைப்பு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் தோற்றுவிக்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க உருவாக்கப்பட்ட தமிழ்க் கலைக்கழகத்தின் முதல் கூட்டம் சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் அறையில் இன்று (21.11.2016 மு.ப. 10.30 மணிக்கு) நடைபெற்றது.

கூட்டத்தில் செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், மொழிபெயர்ப்பு இயக்குநர் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் தகவலுக்கு இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு), செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மின்னஞ்சல்: **dtedp1974@gmail.com** தொலைபேசி எண்: **22541209** தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**